**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1416/2022 P.W.6**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஜேம்ஸ்ராஜா அருளானந்தம் | த–பெ | அருளாநந்து |
| ஊர்: | : | ஏ.ஆர்,மங்களம் | சமயம்: | |
| வயது: | : | 56/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலிவேலை. | மாவட்டம் | இராமநாதபுரம் |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.05.2025**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

----------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் ஏ.ஆர்.மங்களத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். 07.08.2021 அன்று தம்பிராட்டி அம்மன் கோவில் அருகில் லாரி ஒன்று வேகமாக வந்து அதில் பயணம் செய்த நபர் ஒருவர் கீழே விழுந்ததில் பின்னந்தலையில் காயம் ஏற்ப்பட்டு இறந்து விட்டதாகவும், 08.08.2021 அன்று சோமநாதபுரம் போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள் பின்னர் சம்பவயிடத்திற்கு அழைத்து சென்று வரைபடம் தயார் செய்து விசாரணை செய்தார்கள். அங்கு அவர்கள் தயார் செய்த பார்வை மகஜர் ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள 1ல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.2**

**குறுக்கு விசாரணை**

போலீசார், நான் கையெழுத்துபோட்ட ஆவணத்தில் என்ன இருந்தது என்று எனக்கு தெரியாது. சம்பவயிடத்திற்கு போலீசார் என்னை தங்களை அழைத்து செல்லவில்லை காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. இறந்து போனவர்கள் எனது உறவினர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/. J. Karmegakannan.B.A.,B.L
Judicial Magistrate, Karaikudi.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1416/2022 P.W.5**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஞானஸ்டார்லி | த–பெ | பிரான்ஸிஸ் |
| ஊர்: | : | ஏ.ஆர்,மங்களம் | சமயம்: | |
| வயது: | : | 25/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | வழக்கறிஞர். | மாவட்டம் | இராமநாதபுரம் |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.05.2025**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---

முதல் விசாரணை.

நான் தற்சமயம் ஏ.ஆர்.மங்களத்தில் வசித்து வழக்கறிஞராக வேலை செய்து வருகிறேன். நான், 07.08.2021 அன்று எனது தகப்பனார் பிரான்ஸிஸ் என்பவர் லோடு மேன் வேலைக்கு வீட்டில் இருந்து காலை 7.00 மணிக்கு இராமநாதன், செல்வராஜ் ஆகியோருடன் சென்றுவிட்டார். சனவேலி வரை இருசக்கர வாகனத்தில் சென்று விட்டு எனது தகப்பனார் லோடு மேன் வேலைக்காக சென்றார். லாரியில் அவரும் செல்வராஜ், இராமநாதன் ஆகியோரும் சென்றுவிட்டார்கள். அன்று மாலை 4.00 மணியளவில் எனது கணவருக்கு அ.சா.2 க்கு செல்போனில் தொடர்பு கொண்டு மேற்படி லாரி ஓட்டிக்கொண்டிருந்த போது தம்புரான்பட்டி சாலை அருகே EB வயர் குறுக்கே கிடந்ததால் மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் உடையப்பன் கவனக்குறைவாக மேற்படி லாரியை இயக்கி அதில் இருந்த எனது தகப்பனார் பிரான்ஸிஸ் என்பவர் தவறி கீழே விழுந்து விட்டதாகவும் பின்னர் 108 ஆம்புலன்ஸ் உதவியுடன் தேவக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றதாகவும் அங்கு பரிசோதணையில் அவர் இறந்து விட்டதாகவும், அந்த தகவலை எங்களிடம் சொன்னார். மறு நாளை காலை சோமநாதபுரம் காவல் நிலையம் சென்று நடந்த விவரங்களை சொல்லி ஓட்டுநர் மீது நடவடிக்கை எடுக்குமாறு அ.சா.1 புகார் அளித்ததார் நான் உடன் இருந்தேன்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எந்த விவரமும் தெரியாது. புகார் கொடுத்தவர் எனது கணவர் என்பவதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

Sd/. J. Karmegakannan.B.A.,B.L
Judicial Magistrate, Karaikudi.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1416/2022 P.W.4**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | அன்புகுமார் | த–பெ | சவரிமுத்து |
| ஊர்: | : | ஏ.ஆர்,மங்களம் | சமயம்: | |
| வயது: | : | 47/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலி வேலை | மாவட்டம் | இராமநாதபுரம் |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.05.2025**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

--------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் ஏ.ஆர்.மங்களத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். நான், 07.08.2021 அன்று எனது தம்பி மாமனார் பிரான்ஸிஸ் என்பவர் லோடு மேன் வேலைக்கு வீட்டில் இருந்து காலை 7.30 மணிக்கு இராமநாதன், செல்வராஜ் ஆகியோருடன் சென்றுவிட்டார். சனவேலி வரை இருசக்கர வாகனத்தில் சென்று விட்டு எனது தம்பியின் மாமனார் லோடு மேன் வேலைக்காக சென்றார். லாரியில் அவரும் செல்வராஜ், இராமநாதன் ஆகியோரும் சென்றுவிட்டார்கள். அன்று மாலை 4.30 மணியளவில் எனது தம்பி பெர்க்மான்ஸ் என்பவர் எனக்கு செல்போனில் தொடர்பு கொண்டு மேற்படி லாரி ஓட்டிக்கொண்டிருந்த போது தம்புரான்பட்டி சாலை அருகே EB வயர் குறுக்கே கிடந்ததால் மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் உடையப்பன் கவனக்குறைவாக மேற்படி லாரியை இயக்கி அதில் இருந்த எனது தம்பியின் மாமனார் பிரான்ஸிஸ் என்பவர் தவறி கீழே விழுந்து விட்டதாகவும் பின்னர் 108 ஆம்புலன்ஸ் உதவியுடன் தேவக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றதாகவும் அங்கு பரிசோதனையில் அவர் இறந்து விட்டதாகவும், அந்த தகவலை என்னிடம் சொன்னார். பின்னர் நான் ஊரில் இருந்து எனது தம்பி பெர்க்மான்ஸ் என்பவருடன் அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது அவர் இறந்து விட்டார். மறு நாளை காலை சோமநாதபுரம் காவல் நிலையம் சென்று நடந்த விவரங்களை சொல்லி ஓட்டுநர் மீது நடவடிக்கை எடுக்குமாறு அ.சா.1 புகார் அளித்ததார் நான் உடன் இருந்தேன்.

**குறுக்கு விசாரணை**

இந்த சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதவும் தெரியாது என்றால் சரிதான். தம்பி கொடுத்த புகாருக்கு ஆதாரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

Sd/. J. Karmegakannan.B.A.,B.L
Judicial Magistrate, Karaikudi.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1416/2022 P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | செல்வராஜ் | த–பெ | செபஸ்தியான் |
| ஊர்: | : | ஏ.ஆர்,மங்களம் | சமயம்: | |
| வயது: | : | 55/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலி வேலை | மாவட்டம் | இராமநாதபுரம் |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.05.2025**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---

முதல் விசாரணை.

நான் தற்சமயம் ஏ.ஆர்.மங்களத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். நான், பிரான்ஸீஸ் மற்றும் இராமநாதன் ஆகியோர் 07.08.2021 அன்று காலை 7.00 மணியளவில் லாரிக்கு விறகு ஏற்றுவதற்காக அருள்முருகன் என்ற லாரியில் ஓட்டுநர் உடையப்பன் என்பவர் ஓட்ட நாங்கள் 3 நபர்களும் அவர் அருகில் அமர்ந்திருந்தோம். குறிப்பாக பிரான்ஸிஸ் இடது புறமாக ஓரமாக முன் இருக்கையில் ஓட்டுநருக்கு அருகில் கதவு ஓரத்தில் அமர்ந்து வந்தார். மேற்படி லாரியின் பதிவு எண். TN43E3355 ஆகும். உடையப்பன் என்பவர் மேற்படி லாரியை ஓட்டி வந்தார். சுமார் 4.00 மணியளவில் தம்பிராட்டி அம்மன் கோவில் அருகே லாரியில் விறகுகளை ஏற்றிக்கொண்டு சம்பவ சாலை ரோடு பாலம் வழியாக வந்து பிராதான சாலையில் ஏறும் போது EB மின்சார வயர் சற்று தனிவாக இருந்ததது. இதனை ஓட்டுநர் கவனிக்காமல் வாகனத்தை உடனடியாக பிரேக் போட்டு நிறுத்தினார் மேலும் விரைவாக அவர் அந்த லாரியை இயக்கி பிரேக் போட்டதால் அதில் இருந்த பிரான்ஸிஸ் லாரியில் இருந்து கீழே விழுந்து அவருக்கு பின்னந்தலையில் காயம் ஏற்பட்டது. பின்னர் 108 ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு தேவக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அவரை சேர்த்தோம். மருத்துவர்கள் பரிசோதனை செய்து விட்டு அவர்கள் இறந்து விட்டதாக சொன்னர்கள். அந்த தகவலை அ.சா.1 னிடம் நான் சொன்னேன். அ.சா.1 மறு நாள் லாரி ஓட்டுநர் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளித்தார் அந்த விவரம் எனக்கு தெரியும். மேற்படி விபத்து ஏற்படுத்திய லாரியின் ஓட்டுநரை என்னால் பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

உடையப்பனுடன் மாசம் 2 முதல் 3 முறை வேலை செய்வேன். மெயின் ரோடும் விபத்து நடந்த இடமும் அந்த பிரதான சாலையில் வாகனத்தை வேகமாக ஓட்ட முடியுமா என்றால் முடியாது. பிரான்ஸிஸ் பக்கத்தில் யார் இருந்தார்கள் என்றால் நான் தான் அமர்ந்து இருந்தேன். உங்குளுடைய அமர்ந்திருக்கையில் உங்களுக்குள் ஏற்ப்ட்ட இடர்பாடுகலால் அவர் தவறி கீழே விழுந்து விபத்தது ஏற்ப்ட்டது என்றால் சரிதான். எதிரியின் அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்ப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த பின்னர் அந்த இடத்திர் பல் பேர் இருந்ததார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. இறந்த நபர் எனது உறவினர் என்பவதால் அவருக்கு கிடைக்க வேண்டிய இழப்பீடு தொகை பெறுவதற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/. J. Karmegakannan.B.A.,B.L
Judicial Magistrate, Karaikudi.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1416/2022 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | இராமநாதன் | த–பெ | கருப்பையா |
| ஊர்: | : | ஏ.ஆர்,மங்களம் | சமயம்: | |
| வயது: | : | 51/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலி வேலை | மாவட்டம் | இராமநாதபுரம் |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.05.2025**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் ஏ.ஆர்.மங்களத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். நான், பிரான்ஸீஸ் மற்றும் செல்வராஜ் ஆகியோர் 07.08.2021 அன்று காலை 7.30 – 8.00 மணியளவில் லாரிக்கு விறகு ஏற்றுவதற்காக அருள்முருகன் என்ற லாரியில் ஓட்டுநர் உடையப்பன் என்பவர் ஓட்ட நாங்கள் 3 நபர்களும் அவர் அருகில் அமர்ந்திருந்தோம். குறிப்பாக பிரான்ஸிஸ் இடது புறமாக ஓரமாக முன் இருக்கையில் ஓட்டுநருக்கு அருகில் கதவு ஓரத்தில் அமர்ந்து வந்தார். மேற்படி லாரியின் பதிவு எண். TN43E3355 ஆகும். உடையப்பன் என்பவர் மேற்படி லாரியை ஓட்டி வந்தார். சுமார் 3.30 – 4.00 மணியளவில் தம்பிராட்டி அம்மன் கோவில் அருகே லாரியில் விறகுகளை ஏற்றிக்கொண்டு சம்பவ சாலை வழியாக வந்த போது EB மின்சார வயர் சற்று தனிவாக இருந்ததது. இதனை ஓட்டுநர் கவனிக்காமல் வாகனத்தை உடனடியாக பிரேக் போட்டு நிறுத்தினார் மேலும் விரைவாக அவர் அந்த லாரியை இயக்கி பிரேக் போட்டதால் அதில் இருந்த பிரான்ஸிஸ் லாரியில் இருந்து கீழே விழுந்து அவருக்கு பின்னந்தலையில் காயம் ஏற்ப்பட்டது. பின்னர் 108 ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு தேவக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அவரை சேர்த்தோம். மருத்துவர்கள் பரிசோதனை செய்து விட்டு அவர்கள் இறந்து விட்டதாக சொன்னர்கள். அந்த தகவலை அ.சா.1 னிடம் நான் சொன்னேன். அ.சா.1 மறு நாள் லாரி ஓட்டுநர் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளித்தார் அந்த விவரம் எனக்கு தெரியும். மேற்படி விபத்து ஏற்படுத்திய லாரியின் ஓட்டுநரை என்னால் பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

இந்த விபத்து 3.00–4.00 மணியளவில் நடைபெற்றது. இந்த வழக்கின் லாரி ஓட்டுநர் உடையப்பனுடன் எத்தனை நாட்கள் வேலை பார்க்கிறேன் என்றால் மாதம் 3

முதல் 4 முறை சேர்ந்து வேலை பார்ப்போம். தம்பிராட்டி என்ற ஊரில் இருந்து விறகு ஏற்றி வரும் போது விபத்து நடந்த இடத்திற்கும் மெயி07.08.2021 அன்று எனது மாமனார் பிரான்ஸிஸ் என்பவர் லோடு மேன் வேலைக்கு எங்கள் வீட்டில்இருந்து காலை 7.30 மணிக்கு இராமநாதன், செல்வராஜ் ஆகியோருடன் சென்றுவிட்டார். சனவேலி வரை இருசக்கர வாகனத்தில் சென்று விட்டு எனது மாமனார் லோடு மேன் வேலைக்காக ஓட்டுநர் உடையப்பன் என்பவரின் லாரியில் அவரும் செல்வராஜ், இராமநாதன் ஆகியோரும் சென்றுவிட்டார்கள். அன்று மாலை 4.00 மணியளவில் இராமநாதன் என்பவர் எனக்கு செல்போனில் தொடர்பு கொண்டு மேற்படி லாரி ஓட்டிக்கொண்டிருந்த போது தம்புரான்பட்டி சாலைஅருகே EB வயர் குறுக்கே கிடந்ததால் மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் உடையப்பன் கவனக்குறைவாக மேற்படி லாரியை இயக்கி அதில் இருந்த எனது மாமனார் பிரான்ஸிஸ் என்பவர் தவறி கீழே விழுந்து விட்டதாகவும் பின்னர் 108 ஆம்புலன்ஸ் உதவியுடன் தேவக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றதாகவும் அங்கு பரிசோதனையில் அவர் இறந்து விட்டதாகவும், அந்த தகவலை என்னிடம் சொன்னார். பின்னர் நான் ஊரில் இருந்து எனது அண்ணன் அன்புகுமாருடன் அரசு மருத்துவமனை வந்து பார்த்து மறு நாளை காலை சோமநாதபுரம் காவல் நிலையம் சென்று நடந்த விவரங்களை சொல்லி ஓட்டுநர் மீது நடவடிக்கை எடுக்குமாறு நான் புகார் அளித்தேன் அந்த புகார் அ.சா.ஆ.1 போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். ன் திருச்சி சாலை சந்திக்கும் இடத்திற்கும் ஒரு பர்லாங் இருக்கும். நாங்கள் வந்த சாலை கரடுமுரடான கிராமத்து சாலை. லாரி ஓட்டுநருடன் 4 பேர் இருந்தீர்கள் அங்கு போதுமான இடத்தில் இருந்தீர்களா என்றால் சரிதான். இறந்த போன பிரான்ஸிஸ் எனது ஊர்க்காரர், எனது நண்பர். கரடுமுரடான சாலையில் வரும் போது உடன் இருந்தவர்களின் இடர்பாடுகலால் சிக்கி பிரான்ஸிஸ் என்பவர் கீழே விழுந்து இறந்து விட்டார். இறந்து போன பிரான்ஸின் எனது உறவினர் என்பதால் இழப்பீடு தொகை பெறுவதற்காக பொய் சாட்சியம் அளிள்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். சம்பவயிடம் மெயின் ரோட்டும் ஒரு பர்லாங் மட்டுமே இருக்கும் என்பதால் வாகனத்தை அதிவேகமாக ஓட்ட இயலாது என்றால் சரியல்ல.

Sd/. J. Karmegakannan.B.A.,B.L
Judicial Magistrate, Karaikudi.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1416/2022 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பெர்க்மான்ஸ் | த–பெ | சவரிமுத்து |
| ஊர்: | : | ஏ.ஆர்,மங்களம் | சமயம்: | |
| வயது: | : | 35/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | சென்ட்ரிங் வேலை | மாவட்டம் | இராமநாதபுரம் |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.05.2025**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் ஏ.ஆர்.மங்களத்தில் வசித்து சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். 07.08.2021 அன்று எனது மாமனார் பிரான்ஸிஸ் என்பவர் லோடு மேன் வேலைக்கு எங்கள் வீட்டில்இருந்து காலை 7.30 மணிக்கு இராமநாதன், செல்வராஜ் ஆகியோருடன் சென்றுவிட்டார். சனவேலி வரை இருசக்கர வாகனத்தில் சென்று விட்டு எனது மாமனார் லோடு மேன் வேலைக்காக ஓட்டுநர் உடையப்பன் என்பவரின் லாரியில் அவரும் செல்வராஜ், இராமநாதன் ஆகியோரும் சென்றுவிட்டார்கள். அன்று மாலை 4.00 மணியளவில் இராமநாதன் என்பவர் எனக்கு செல்போனில் தொடர்பு கொண்டு மேற்படி லாரி ஓட்டிக்கொண்டிருந்த போது தம்புரான்பட்டி சாலைஅருகே EB வயர் குறுக்கே கிடந்ததால் மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் உடையப்பன் கவனக்குறைவாக மேற்படி லாரியை இயக்கி அதில் இருந்த எனது மாமனார் பிரான்ஸிஸ் என்பவர் தவறி கீழே விழுந்து விட்டதாகவும் பின்னர் 108 ஆம்புலன்ஸ் உதவியுடன் தேவக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றதாகவும் அங்கு பரிசோதனையில் அவர் இறந்து விட்டதாகவும், அந்த தகவலை என்னிடம் சொன்னார். பின்னர் நான் ஊரில் இருந்து எனது அண்ணன் அன்புகுமாருடன் அரசு மருத்துவமனை வந்து பார்த்து மறு நாளை காலை சோமநாதபுரம் காவல் நிலையம் சென்று நடந்த விவரங்களை சொல்லி ஓட்டுநர் மீது நடவடிக்கை எடுக்குமாறு நான் புகார் அளித்தேன் அந்த புகார் அ.சா.ஆ.1 போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

விபத்திரல் இறந்த பிரான்ஸிஸ் எனது மணைவியின் தகப்பனார். எனது மாமனார் லாரி ஓட்டும் உடையப்பன் என்பவரிடம் எவளவு நாட்கள் வேலை செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. மறு நாள் காவல் நிலையத்தில் நானாக தான் எழுதி கொடுத்தேன். இந்த விபத்து எனது மாமனாரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது

என்றால் லாரியை ஓட்டிய உடையப்பனின் கவனக்குறைவால் தான் ஏற்ப்பட்டது என்றால் சரிதான். இறந்து போனவர் எனது மனைவின் தகப்பனார் என்பதால் அவருக்குறிய இழப்பீடு பெறுவதற்காக இந்த வழக்கிற்கு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது.

Sd/. J. Karmegakannan.B.A.,B.L
Judicial Magistrate, Karaikudi.